**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் தேதி வியாழக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.176/2022</u>**

<u>(CNR No. TNPB02-004621-2022)</u>

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கை.களத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்.20/2022 ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

1. தங்கதுரை, வயது 35/2022
   த/பெ.கணேசன்,

2. மணிகண்டன், வயது 26/2022
   த/பெ. பிச்சமுத்து,

3. பிரசாந்த்,(இறந்துவிட்டார்)
   த/பெ. பிச்சமுத்து

4. சிற்றம்பலம், வயது 45/2022,
   த/பெ. தங்கவேல்,

**<u>எதிரிகளின் முகவரி</u>**
நடுத்தெரு,
அய்யனார்பாளையம் கிராமம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

... எதிரிகள்

(05.03.2026 ம் தேதி 2 ம் எதிரி இறந்துவிட்டார் என்று அரசு தரப்பில் இறப்பு சான்றிதழுடன் மெமோ தாக்கால் செய்யப்பட்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டுள்ளன).

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை.) |

Judicial Magistrate, Additional Mahila Court
RESHMA Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:12:30 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி | |
| | | A1, A2, A4– | 16.02.2022(AB) | |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 27.06.2022 | | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on<br>நாள் : 22.08.2022 | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | 1. Crl.M.P.No. 382 of 2022 Dt :16.02.2022<br>Surrender petition–Accepted.<br>2.Crl.M.P.No. 1683 of 2025 Dt :07.10.2025 –<br>U/s. 320(2)–Dismissed.<br>3.M.P.No. 16 of 2026 Dt :27.02.2026 –<br>Advance hearing petition–Allowed. | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசார ணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3 | 07.10.2025<br>07.10.2025<br>27.02.2026 | இல்லை<br>இல்லை<br>27.02.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 05.03.2026 | | |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 07.07.2022 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 05.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு.சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும்,



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:12:35 +0530

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.அருணன் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

1. கடந்த 16.01.2022 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் ராமசந்திரன் மற்றும் அவரது மனைவி, பிள்ளைகளுடன் அவரது வீட்டின் அருகில் அமர்ந்து பேசி கொண்டிருந்த போது 1ஆம் எதிரி குடி போதையில், முன்விரோதத்தின் காரணமாக கையில் இரும்பு கம்பியை வைத்துக்கொண்டு என்னடி தேவடியா புண்டமவளே இங்க என்னடி உட்காந்து பேசிகிட்டு இருக்கிங்க என்று கெட்ட வார்த்தையால் திட்டி, ராமசந்திரன் மனைவியின் முதுகில் இரும்பு கம்பியால் ஓங்கி அடித்துள்ளார் என்றும் அதை தடுத்த ராமசந்திரனையும் மேற்படி தங்கதுரை நீ என்னடா ஆளுபுண்டையா என்று திட்டி இரும்பு கம்பியால் ஓங்கி தலைபகுதி மற்றும் தோள்பட்டை பகுதியில் கடுமையாக தாக்கியுளார் என்றும் இதனால் ராமச்சந்திரனுக்கு இடது கண்மேல் நெற்றியில் ரத்தகாயம் ஏற்பட்டுள்ளது என்றும் மேலும் தங்கதுரையுடன் வந்திருந்த அவரின் அண்ணன் பச்சமுத்துவின் மகள்கள் 2, 3 எதிரிகள் மற்றும் தங்கதுரையின் பங்காளி தங்கவேல் மகன் 4 ஆம் எதிரி சிற்றம்பலம் ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டு அசிங்கமாக திட்டி ராமசந்திரன் மனைவியின் சேலையை உருவி மானபங்கம் செய்து கையாலும், இரும்பு கம்பியாலும் கடுமையாக தாக்கியுள்ளனர் என்றும் பின் இரும்பு கம்பி மற்றும் கொடுவாளை காட்டி இன்று தப்பித்துவிட்டீற்கள் என்றைக்கு இருந்தாலும் உங்களை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுள்ளனர் என்றும் எனவே 1, 2, 3, 4 எதிரிகளின் செய்கையானது 294(b), 323, 324, 506(II) IPC மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் பிரிவு 4–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கை.களத்தூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1, 2, 3, 4 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:12:41 +0530

**குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

3. 1, 2, 4 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1 ஆம் எதிரி மீது இ.த.ச. 294(b), 324 ஆகிய பிரிவுகளின் கீழும், 2, 4 எதிரிகளின் மீது இ.த.ச. 323, 324, 506(2) மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1, 2, 4 எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்**

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ராமச்சந்திரன் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 16.01.2022 அன்று மாலை சுமார் 5 மணியளவில் தானும் தன் மனைவியும் தங்கள் வீட்டுக்கு வாசலுக்கு முன்பு கட்டில் போட்டு உட்கார்ந்திருந்தோம் என்றும் கழிவு தண்ணீர் வருவது சம்மந்தமாக எதிரிகளிடம் கேட்டோம் என்றும் அதில் தங்களுக்கிடையே வாய் தகராறு ஏற்பட்டது என்றும் அந்த தகராறில் எதிரிகள் தன்னையும் தனது மனைவியையும் எதுவும் செய்யவில்லை என்றும் எதிரிகள் தன்னையும் தன் மனைவியையும் தகாத வார்த்தைகளால் பேசவில்லை என்றும் தன்னையும் தன் மனைவியையும் எதிரிகள் ஏதும் தாக்கவில்லை என்றும் தன்னையும் தன் மனைவியையும் எதிரிகள் கொலைமிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என்றும் எதிரிகள் யாரும் தனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்யவில்லை என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும் தான் அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் போலிசார் விசாரித்த போது தற்போது கூறியவாறு தான் சொல்லியுள்ளேன் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஜெயந்தி தனது நீதிமன்ற சாட்சியத்தில் சம்பவத்திற்கு முன்பாக அ.சா.1, அவரது மனைவி மற்றும்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:12:47 +0530

எதிரிகளுக்குமிடையே என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும் அ.சா.1ம் எதிரிகள் மீது எதற்காக புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் வழக்கு சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் வழக்கு சம்பவத்தில் யார் யாருக்கு காயம், யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்று தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

7. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 பிச்சைமணி(காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 26.01.2022ம் தேதி அன்று கைகளத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது ராமச்சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதனை பரிசீலனை புகாரின் தன்மையின் அடிப்படையில் கைகளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 20/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act ன் படி அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும் பின்னர் வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமலிங்கம், அம்மணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றும் பின்னர் சாட்சிகள் ராமச்சந்திரன், ஜெயந்தி, சுந்தரராஜன், ஜோதிவேல், மணிகண்டன், ராமலிங்கம், அம்மணி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றும் இவ்வழக்கு எதிரிகளை தேடி வந்த நிலையில் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று தக்க நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டதால் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் அ.சா.1க்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபு என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஒன்று பெற்றேன் என்றும் பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act ன்படி கடந்த 09.04.2022ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

**<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்</u>**

8. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2, 4 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1)



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:12:52 +0530

(ஆ)இன் கீழ் 1, 2, 4 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2, 4 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத் தரப்பு வாதம்**

9. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2, 4 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**எதிரிகள் தரப்பு வாதம்**

10. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1 , 2, 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டார்கள் என்றும், 1, 2, 4 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2, 4 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

11. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2, 4 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு**

12. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 16.01.2022 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் ராமசந்திரன் மற்றும் அவரது மனைவி, பிள்ளைகளுடன் அவரது வீட்டின் அருகில் அமர்ந்து பேசி கொண்டிருந்த போது 1ஆம் எதிரி குடி போதையில், முன்விரோதத்தின் காரணமாக கையில் இரும்பு கம்பியை வைத்துக்கொண்டு என்னடி தேவடியா புண்டமவளே இங்க என்னடி உட்காந்து பேசிகிட்டு இருக்கிங்க என்று கெட்ட வார்த்தையால் திட்டி, ராமசந்திரன் மனைவியின் முதுகில் இரும்பு கம்பியால் ஓங்கி

அடித்துள்ளார் என்றும் அதை தடுத்த ராமசந்திரனையும் மேற்படி தங்கதுரை நீ என்னடா ஆளுபுண்டையா என்று திட்டி இரும்பு கம்பியால் ஓங்கி தலைபகுதி மற்றும் தோள்பட்டை பகுதியில் கடுமையாக தாக்கியுளார் என்றும் இதனால் ராமச்சந்திரனுக்கு இடது கண்மேல் நெற்றியில் ரத்தகாயம் ஏற்பட்டுள்ளது என்றும் மேலும் தங்கதுரையுடன் வந்திருந்த அவரின் அண்ணன் பச்சமுத்துவின் மகள்கள் 2, 3 எதிரிகள் மற்றும் தங்கதுரையின் பங்காளி தங்கவேல் மகன் 4 ஆம் எதிரி சிற்றம்பலம் ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டு அசிங்கமாக திட்டி ராமசந்திரன் மனைவியின் சேலையை உருவி மானபங்கம் செய்து கையாலும், இரும்பு கம்பியாலும் கடுமையாக தாக்கியுள்ளனர் என்றும் பின் இரும்பு கம்பி மற்றும் கொடுவாளை காட்டி இன்று தப்பித்துவிட்டீற்கள் என்றைக்கு இருந்தாலும் உங்களை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுள்ளனர் என்றும் எனவே 1, 2, 3, 4 எதிரிகளின் செய்கையானது 294(b), 323, 324, 506(II) IPC மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் பிரிவு 4-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2, 4 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 294(பி)-ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

13. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 ஆம் எதிரி மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 யும், அவரது மனைவியையும் ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)-ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் புகார்தாரரான அ.சா.1-யும், அவரது மனைவியையும் 1 ஆம் எதிரி பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 ஆம் எதிரி மீதான இ.த.ச

Judicial Magistrate, Additional Mahila Court
RESHMA Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:03 +0530

பிரிவு 294(பி)—ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டம் 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

14. இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 ன் மனைவியை 2, 4 எதிரிகள் குற்றமுறு எண்ணத்துடன் தன்னிச்சையாக கையால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 323—ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 323—ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ன் மனைவியை 2, 4 எதிரிகள் தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 323—ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டம் 324 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

15. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 4 எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்புகம்பியால் அ.சா.1 —யும், அ.சா.1 ன் மனைவியையும் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1, 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 324—ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 324—ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 —யும், அ.சா.1 ன் மனைவியையும் இரும்புக்கம்பியால் தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 324—ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 506(2) பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

16. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 2, 4 எதிரிகள் அ.சா.1 —யும், அ.சா.1 ன் மனைவியையும் பார்த்து இரும்பு கம்பி மற்றும் கொடுவாளை காட்டி இன்று தப்பிவிட்டீர்கள் என்றைக்காயிருந்தாலும் உங்களை கொலை செய்யாமல்

Judicial Magistrate, Additional Mahila Court
RESHMA Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:08 +0530

விடமாட்டேன் என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.506(2) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் புகார்தாரரை குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 506(2)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும்:</u>**

17. இந்த வழக்கில் அரசு தரப்பில் 2, 4 எதிரிகள் அ.சா.1 ன் மனைவியை சேலையை பிடித்து இழுத்து பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவருக்கெதிராக குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 2, 4 எதிரிகள் அ.சா.1 ன் மனைவிக்கு எதிராக அவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 2, 4 எதிரிகள் மீதான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1, 2, 4 எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. முடிவில், 3 ஆம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டது. 1 ஆம் எதிரி மீதான இ.த.ச. 294(b), 324 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 2, 4 எதிரிகளின் மீதான செய்கையானது இ.த.ச. 323, 324, 506(2) மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2, 4 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:13 +0530

செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2, 4 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 05.03.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:19 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :-**

1. அ.சா.1 – ராமசந்திரன்
2. அ.சா.2 – ஜெயமணி
3. அ.சா.3 – பிச்சைமணி(உதவி ஆய்வாளர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :-**

1. அ.சா.ஆ.1 – புகார் மனு
2. அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை
3. அ.சா.ஆ.3 – பார்வைமகஜர்
4. அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்
5. அ.சா.ஆ.5 – காயச்சான்று

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :-** இல்லை

**IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :-** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:23 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:27 +0530

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Kai.Kalathur PS, Cr.No.20/2022 U/S.294(b), 323, 324, 506(2) IPC and Sec 4 of TNPHW Act | Name | A1 – Thangadurai | Occurrence | 16.01.2022 | - |
| | | Father's Name | Ganesan | Complaint | 26.01.2022 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Nadu Street, Ayyanarpalayam, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 16.02.2022 (AB) | |
| | | Age | 35/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 07.10.2025 | |
| | | | | Closure of Trial | 27.02.2026 | |
| | | | | Sentence or Order | 05.03.2026 | |
| 2. | Kai.Kalathur PS, Cr.No.20/2022 U/S.294(b), 323, 324, 506(2) IPC and Sec 4 of TNPHW Act | Name | A2 – Manikandan | Occurrence | 16.01.2022 | |
| | | Father's Name | Pichamuthu | Complaint | 26.01.2022 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Nadu Street, Ayyanarpalayam, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 16.02.2022 (AB) | |
| | | Age | 26/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 07.10.2025 | |
| | | | | Closure of Trial | 27.02.2026 | |
| | | | | Sentence or Order | 05.03.2026 | |
| 3. | Kai.Kalathur PS, Cr.No.20/2022 U/S.294(b), 323, 324, 506(2) IPC and Sec 4 of TNPHW Act | Name | A4 – Chitrambalam | Occurrence | 16.01.2022 | |
| | | Father's Name | Thangavel | Complaint | 26.01.2022 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Nadu Street, Ayyanarpalayam, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 16.02.2022 (AB) | |
| | | Age | 45/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 07.10.2025 | |
| | | | | Closure of Trial | 27.02.2026 | |
| | | | | Sentence or Order | 05.03.2026 | |

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.03.05 17:13:33 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 176 OF 2022

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Ramachandiran |
| Accused | 1.Thangadurai S/o.Ganesan<br>2.Manikandan S/o.Pichamuthu.<br>3. Chitrambalam, S/o. Thangavel |
| Offence | U/S.294(b), 323, 324, 506(2) IPC and Sec 4 of TNPHW Act |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Thangadurai | Ganesan | Male | Labourar | Ayyanarpalayam | 35/2022 |
| 2. | Manikandan | Pichamuthu | Male | Labourar | Ayyanarpalayam | 26/2022 |
| 3. | Chitrambalam | Thangavel | Male | Labourar | Ayyanarpalayam | 45/2022 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 16.01.2022 | 26.01.2022 | 16.02.2022 | 16.02.2022(AB) | 07.10.2025 | 27.02.2026 | 05.03.2026 | - |
| 16.01.2022 | 26.01.2022 | 16.02.2022 | 16.02.2022(AB) | 07.10.2025 | 27.02.2026 | 05.03.2026 | - |
| 16.01.2022 | 26.01.2022 | 16.02.2022 | 16.02.2022(AB) | 07.10.2025 | 27.02.2026 | 05.03.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:13:39 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.